**களுத்துறை நகர சபை 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

களுத்துறை நகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) 181(1) ஆம் உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள களுத்துறை நகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை

அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.**

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நியமத்தின் அத்தியாய இலக்கம் 3.27 முதல் 3.32 வரை குறிப்பிடப்பட்ட பந்திகளுக்கு இணங்க காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் நிரலில் சீராக்கப்படாத போதும் காசுப்பாய்ச்சல் கூற்றில் ஒப்பீட்டுரீதியான தாக்கம் ஏற்படவில்லை. | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க காசுப்பாய்ச்சல் கூற்று தயாரித்தல் வேண்டும். |

**1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்குரிய நிலையான வைப்பு வட்டி வருமானம் மற்றும் பெற வேண்டிய வட்டி வருமானம் முறையே ரூபா 24,017,493 மற்றும் ரூபா 21,705,750 ஆக இருந்த போதிலும் வட்டி வருமானம் ரூபா 24,288,709 ஆக அதாவது ரூபா 271,216 அதிகரித்தும் கிடைக்க வேண்டிய வட்டி வருமானம் ரூபா 21,066,667 ஆக அதாவது ரூபா 639,083 குறைத்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்யப்படும். | அட்டுறு அடிப்படையில் வருமானங்கள் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 34,345,527 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 40,481,432 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரியும் வரியும் | 42,552,200 | 43,787,063 | 48,773,656 | 31,478,437 | 40,751,000 | 41,249,783 | 28,800,619 | 36,249,409 |
| (ii) | வாடகை | 19,259,900 | 14,233,583 | 10,717,823 | 398,700 | 13,475,000 | 8,068,319 | 8,777,469 | 256,849 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,276,000 | 2,454,024 | 2,453,374 | - | 200,000 | 559,266 | 559,266 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 208,261,900 | 235,215,781 | 168,382,886 | 81,066,667 | 2,127,000 | 2,759,655 | 2,762,655 | 19,800 |
| | மொத்தம் | 272,350,000 | 295,690,451 | 230,327,739 | 112,943,804 | 56,553,000 | 52,637,023 | 40,900,009 | 36,526,058 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02-03 வருடங்கள் முதல் கொண்டுவரப்படுகின்ற நிலுவை ரூபா 4,290,844 ஆகவும், 03-05 வருடங்களுக்கிடையிலான நிலுவை ரூபா 1,887,185 ஆகவும், 05-10 வருடங்களுக்கிடையிலான நிலுவை ரூபா 1,297,440 ஆகவும் மற்றும் 10 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவை ரூபா 205,517 ஆகவும் இருந்தது. | ஆதனவரி வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடல் வேண்டும். |
| (ஆ) | மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 60,000,000 ஆகும். | 2023 ஆம் ஆண்டில் ரூபா 9,294,230 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலுவை முத்திரைக் கட்டணத்தை விரைவாகப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

3.1 **செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டில் பழுதுபார்த்தலுக்காக கையளிக்கப்பட்ட மின்பிறப்பாக்கி இயந்திரம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பழுதுபார்த்து சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பழுதுபார்த்தல் இறுதிக்கட்டத்தில் காணப்படுகின்றமையால் விரைவாக சபைக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சபையின் சொத்துக்கள் குறித்துரைத்த கால எல்லையில் பழுதுபார்க்கப்பட்டு மீண்டும் கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2020 செப்டெம்பர் 23 ஆம் திகதி பழுதுபார்த்தலுக்காக தனியார் நிறுவனம் ஒன்றிற்கு கையளிக்கப்பட்ட இசுசு லொறி வண்டியின் எஞ்ஜின் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பழுதுபார்க்கப்பட்டு சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பழுதுபார்த்தல் இறுதிக்கட்டத்தில் காணப்படுகின்றமையால் விரைவாக சபைக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சபையின் சொத்துக்கள் குறித்துரைத்த கால எல்லையில் பழுதுபார்க்கப்பட்டு மீண்டும் கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | சபை உறுப்பினர்களுக்காக பாடநெறிகளைப் பின்பற்றுவதற்காக 1988 இன் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் வழங்கப்படாதிருக்கும் போது சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் மூன்று உறுப்பினர்களுக்காக 2020 ஆம் ஆண்டில் ரூபா 74,500 தொகையும், மீளாய்வாண்டில் ஒரு உறுப்பினருக்காக ரூபா 20,000 தொகையும் ஆக உரிய பயிற்சியளித்தல் நிறுவனத்திற்காக செலுத்தப்பட்டிருந்தது. | ஒரு உறுப்பினருக்கு இறுதி பரிசோதனைக்கு மீண்டும் சமூகமளிப்பதற்கும் மற்றும் இன்னுமொரு உறுப்பனருக்கு இதுவரை பாடநெறி பூர்த்திசெய்யப்படாமலிருந்தமையால் சான்றிதழ் சமர்ப்பிப்பதற்கு முடியாதிருந்தது. | நகர சபைகள் சட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் நேர் ஊழியர் அடிப்படையில் சபை அங்கீகாரமின்றி சபைக்கு உரித்தற்ற 64 மீற்றர் நீளம் மற்றும் 3.65 மீற்றர் அகலமுடைய பிலிப்நேரி தேவாலயத்தின் உள்ளக வீதி தார் இட்டு அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தது. | நகர எல்லையில் அமைந்துள்ள பொது வீதிகள் சட்ட ரீதியாக திருத்தி அமைக்கப்படல் வேண்டும். | சபைக்கு உரித்தற்ற வீதிகள் அபிவிருத்தி செய்ய முடியாது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | செயலாளரினதும், களஞ்சியப் பொறுப்பு உத்தியோகத்தரினதும் கையொப்பமின்றி மற்றும் திகதி இன்றிய இலக்கம் 2174 என்ற விநியோகித்தல் கட்டளை மூலம் முறையான அங்கீகாரம் மற்றும் மேற்பார்வையின்றி இந்த செயற் திட்டத்திற்காக களஞ்சியத்திலிருந்து மூலப் பொருட்கள் வழங்கப்பட்டிருந்தன. | பொருட்கள் தலைவரினால் கோரப்பட்டிருந்ததுடன் பொருட்கள் முன்னாள் வேலை கட்டுப்பாட்டு உத்தியோகத்தரால் பெறப்பட்டிருந்தது. | முறையான அங்கீகாரமின்றி களஞ்சியத்திலிருந்து பொருட்களை வழங்காதிருத்தல் வேண்டும். |

**3.3 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சில வருடங்களுக்கு முன்னர் இருந்து செயற்பாடற்றுக் காணப்படுகின்ற பேல் இயந்திரம் மீளாய்வாண்டின் போது பழுதுபார்க்கப்பட்டிருக்கவில்லை. | உரிதிப் பாகங்களைக் கண்டறிவதில் வசதியீனத்தினால் பழுதுபார்க்க முடியாதிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டில் பழுதுபார்க்கப்படும். | சபையின் சொத்துக்களை உச்ச அளவில் பயன்படுத்துதல் வேண்டும். |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான 03 வாகனங்களைப் பழுதுபார்ப்பதற்காக இயந்திரப் பொறியியலாளர் பரிசோதனை கிடைத்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்டிருக்கவில்லை. | உரிதிப் பாகங்களைக் கண்டறிவதில் வசதியீனத்தினால் பழுதுபார்க்க முடியாதிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டில் பழுதுபார்க்கப்படும். | வாகனங்களைப் பழுதுபார்த்து பயன்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | இயந்திரப் பொறியலாளரின் பரிந்துரையின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான 04 வாகனங்களைப் பழுதுபார்த்தல் பொருளாதார ரீதியில் நலன் இல்லாதிருந்ததாக குறிப்பிடப் பட்டபோதும் அது தொடர்பாக எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 02 வாகனங்களைப் பழுதுபார்த்தல் ஆக்கபூர்வமானதாக இல்லாதிருந்ததுடன் மிகுதி 02 வாகனங்களினதும் செசி இலக்கத்தைக் கண்டறிவதற்கு முடியாதிருந்தது. | பழுதுபார்த்தல் ஆக்கபூர்வமானதாக இல்லாதுள்ள வாகனங்களை விற்றுத் தீர்த்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) நகர சபைக்குச் சொந்தமான 03 வாகனங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சபையின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த 03 வாகனங்களையும் பழுதுபார்த்தல் பொருளாதார ரீதியில் பயனுள்ளதாக இல்லாமையினால் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கு அறிவித்து வாகனத்தின் ஸ்கிரப் ஆக விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு இயந்திரப் பொறியியலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | உடைந்த கூறுகளாக விற்பனை செய்வதற்கு முன் சபைக்குச் சொந்தமான வாகனங்கள் சபையின் பெயரில் பதிவு செய்யப்படல் வேண்டும். |

## 3.5 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஒக்டோபர் 05 ஆந் திகதிய விநியோகித்தல் கட்டளை 242 இல் விடய இலக்கம் 06 இன் கீழ் வீதியின் இரண்டாவது தடவை தார் இடுவதற்காக 04 பரல்கள் பெறப்பட்டிருந்த போதிலும் வீதியில் இரண்டாவது தடவை தார் இடப்படாதிருந்ததுடன் உரிய 04 பரல்களும் வேலைக் கட்டுப்பாட்டாளரின் பொறுப்பில் காணப்படவில்லை. | விநியோகித்தல் கட்டளை 242 இல் விடய இலக்கம் 06 இன் கீழ் இரண்டாவது தடவை தார் இடுவதற்காக 04 தார் பரல்கள் வழங்கப்பட்டுள்ளது. | வளங்களை பயன்படுத்துதல் வேண்டும். |